# பரலோக பொக்கிஷங்கள்

**மேலானவைகளையே நாடுங்கள்!** (கொலோசெயர் 3:2)



## இம்மைக்குரிய சுக ஜீவியத்தைவிட கிருபையே நல்லது!

**ப**வுல் கற்றுக்கொண்ட கிருபையின் ஆச்சரியமே, நமக்கும் வேண்டும்! குறிப்பாக ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட 'மாம்சத்தில் ஒரு முள்' தந்த வேதனை, துன்பங்கள், ஆகிய இவைகளுக்காக அல்லது "இந்த ஜீவனுக்காக" தேவனைத் தேடி வேண்டிக் கொண்ட பவுலுக்கு.... தேவன் கற்றுக்கொடுத்த பாடம் என்னவெனில்: "பவுலே, உன் எவ்வித துன்ப பலவீனத்திலும், என் கிருபையை அன்றோ நீ தேடியிருக்க வேண்டும்! ஏனென்றால், என் கிருபை உனக்குப் போதும்!" என்றே கற்றுக்கொடுத்தார்!

விழிப்படைந்த பவுல் "நிந்தை தரும் நெருக்கங்கள், நான் தேவனிடம் ஓடி, கிருபையை நாடச்செய்யும் தருணம் என கண்டேன்! ஆகவே, துன்பங்களை, சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்!" என ஜெயமாய் கெம்பீரித்தார்!! (2கொரி.12:8,9). "ஜீவனைப் பார்க்கிலும்" (இம்மைக்குரிய சுக துக்கங்களைக் காட்டிலும்) உமது கிருபையே நல்லது! என்ற உண்மையை அனுபவித்தார்!

-tr



## ‘மனுஷீக தலைமையில் ஐக்கியம்’ பனித்தூண்களுக்கு ஒப்பானது!

**வே**தம் கற்றுக்கொடுக்கும் ஐக்கியம், முழு இருதயமான தெய்வ அன்பிலிருந்து பிறப்பதே ஆகும். அப்போது மாத்திரமே, அந்த கிறிஸ்தவ ஐக்கியத்தில் ‘மாறாத மனஉருக்கம்’ உண்டாக முடியும். இதுபோன்ற தூய ஐக்கியம் தேவனுடைய கிரியையின் மூலமாகவே நடைபெற வேண்டும்.

ஒரு பக்தன் கூறும்போது, ‘ஸ்திரமான ஐக்கியம்’ (Solidarity) உருவாக்குவதாகக் கூறி, ஒருவன் தன் சுய - பெலத்தில் ‘தன் தலைமையை முன் வைத்து’ முயலும்போது, அங்கு ஏராளமான பிழை ஏற்பட வாய்ப்பு உண்டு என கூறினார். அது எப்படியென்றால், வேறுபாடுகள் கொண்ட அனைவரையும் ‘ஒரே டிகிரி அளவில்’ பனித்தூண்களாய் மாற்றும் மனுஷீக ஸ்திரத்தன்மை! என எச்சரிக்கையாய் குறிப்பிட்டார்.

இதுபோன்ற “உறைந்த பனித்தூண்களின் ஐக்கியம்” உருவாக்குவதற்கு ஒரே ஒரு பிரமாணம் என்னவென்றால், ‘எனக்கு’ அல்லது ‘என் அறிவுரைக்கு’ யாரும் ஒருபோதும் எந்த மறுப்பும் கூறாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடின பிரமாணமேயாகும்! இந்த அடிப்படைக்கு ஒத்து கொண்டவர்கள் மாத்திரமே, அவர்களின் ‘மனுஷீக ஐக்கியத்தில்’ இணைந்திருக்க முடியும் என்ற ஸ்திரமான.... ஆனால், உயிரற்ற ஓர் ஐக்கியம்!

ஆகவே, ஐக்கியம் என்ற பெயரில் ‘ஒரே விதமாக இருக்க வைப்பது’ ஆவிக்குரிய மனப்பூர்வம் அல்ல!

*-Ed*

**2025 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் **M.O** செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மார்ச் 15-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். நன்றி!

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## புயலின் நடுவில் அமைதியே, ஆத்துமத்தின் உறுதி!

*துன்பத்தில் விரைந்து 'அமைதி' தரும் கர்த்தர்*

ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு குடும்பமோ அல்லது ஒரு சபையோ, கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த தங்களின் ஜீவிய பயணத்தை "தீயையும், தண்ணீரையும் கடந்து வந்தோம்! ஆகிலும், செழிப்பான இடத்தில் எங்களை கொண்டு வந்து விட்டீர்" *(சங்.66:12)* என அறிக்கை செய்வது '**ஓர் ஜெய தொனி**' அல்லவா?

ஓர் எதிர்மறையான வாழ்க்கையில் ஒருவன் பெற்ற சுக-ஜீவியம் இந்த உலகில் உள்ள யாருக்குமே விநோதமாக தோன்றும்! இத்தனை துன்பத்தின் நடுவில் பிறந்த இந்த சமாதானம், புயலுக்கு முன்பாக தோன்றும் 'காற்று வீசாமல், கடல் உள்வாங்கி' ஏற்படும் ஓர் மாயான அமைதி அல்ல! மாறாக, கொடிய புயல் வீசியதற்குப் பின்பாக நிலவிடும், மெல்லிய குளிர்ந்த காற்று வீசிடும் தெய்வீக அமைதியே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

*பொதுவாக, ஐசுவரியமுள்ள ஒருவனை, யாதொரு துன்பங்களும் சந்திக்காதவனை பெலன் கொண்டவனென்றோ, அல்லது அமைதி கண்டவனென்றோ கூறுவது பெரிய காரியமல்ல. ஏனென்றால் அவனுடைய 'சாந்தமான' குணாதிசயம் இன்னதென்று ஒருபோதும் சோதித்தறியப்படவில்லை! அவனோ 'ஒரு சிறிய அதிர்ச்சியை' தாங்கிக் கொள்வதெப்படி? என்பதை அறியாதவன்! தன்னுடைய கடல் பயணத்தில், எந்தவொரு புயலையும் சந்திக்காத மாலுமியை ஓர் சிறந்த மாலுமி என, யாரும் கூறிட இயலாது. அவன், கடலின் மெல்லிய காற்று வீசும் காலத்தில், ஊழியம் செய்திருக்க முடியும்! ஆனால், புயலின் சீற்றத்தை எதிர்கொண்ட மாலுமி மாத்திரமே கப்பலின் அடித்தளம் உறுதியாய் இருக்கிறதா? பாய்மர கயிறுகள் பலன் கொண்டதாய் கட்டப்பட்டதா? நங்கூர கொக்கிகள் தரையை பற்றிக்கொள்ள உறுதியுடன் நிற்கிறதா? புயல் சீற்றத்தின் இரைச்சலை வைத்து, கடலின் சீற்றம் எவ்வித தன்மையில் உள்ளது? என்பதையெல்லாம் அனுபவமாய் அறிந்திருப்பான். உண்மைதான், கொடிய*

*புயலை கடந்து பயணம் செய்த மாலுமியே திறமை கொண்ட மாலுமி!*

பெரும் துயரமான பெருங்காற்று முதன்முதலாக நம் மீதோ, நம் குடும்பத்தின் மீதோ, அல்லது நாம் கூடிவரும் சபையின் மீதோ வீசிய நேரத்தில் ‘எல்லாமே அழிந்து விட்டதே’ என்றே கதிகலங்கி நிற்கிறோம். நாம் பற்றிக்கொண்டிருந்த நம்பிக்கையின் மெல்லிய கொடி ஆதாரமின்றி துண்டிக்கப்பட்டு போனது! திராட்சை கொடி படர்ந்திருந்த பந்தல் தட்டிகளும் சிதறுண்டு கீழே விழுந்து விட்டன! இவ்வித அதிர்ச்சியில்தான், நாம் சற்று மன தெளிவடைந்து “மேல் நோக்கிப் பார்க்கும்” திறனைப் பெற முடிந்தது. கர்த்தரை மேல் நோக்கிப் பார்க்க நாடியிருந்த நேரத்தில், ஒரு மெல்லிய சத்தம் புறப்பட்டு வந்து, நடந்துவிட்ட நிகழ்வுகளை சுட்டிக்காட்டி, “**இது கர்த்தர்!**” எனக் கூறி நம்மை தேற்றிச் சென்றது! மனதில் விசுவாச தெம்பு பெற்ற நாம், இப்போது சிதறுண்டு போன நம்பிக்கைகளை மீண்டுமாய் சேர்த்து, இணைத்துக் கட்டி, கர்த்தருடைய பாதத்தில் சமர்ப்பணம் செய்து அமைதி பெற்றோம்!

> “
> **அவருடைய பாதத்திற்கு நம்மைக் கொண்டு சென்ற இந்த கொடிய சீறலான காற்று, இப்போது நமக்கு “உறுதியான நம்பிக்கையும், பயமற்ற பாதுகாப்பையும், மா அதிசயமான சமாதானத்தையும், நமக்கு வாரி வழங்கியதை” நெஞ்சார அனுபவித்து, பெரு மகிழ்ச்சி அடைகிறோம்!**

அது எப்படியெனில், கொடிய சூழ்நிலைகள் என் சிறிய படகை பலமாய் தாக்கிய போதும், **என் ஆண்டவர் எழுந்து வந்தார்!** என்ற அனுபவமாய் மாறியது மாத்திரமல்லாமல், ‘சமாதானம் உண்டாகக் கடவது’ என்ற இனிய குரலும் தொனித்து என்னையும் எங்களையும் பெலப்படுத்தியது! ஆம், அதுவே நமது மெய்யான பெலன்.

இந்தப் புயல் செய்த மற்றொரு சேதமும் உண்டு! ஆம், கேடான சந்தேகமும், இனம் தெரியாத பயமும், உள்ளத்தை ஆட்கொண்டது. வழியும் தெரியவில்லை, ஒளியும் காணப்படவில்லை! நான்கு திசையும் இருள் சூழ்ந்து என்னை திகைத்திட வைத்தது! ‘அப்போதும்’ **என் ஆண்டவர் எழுந்து வந்தார்.** அவர் முகம் நான் கண்டேன்! கிருபை பொருந்திய அவரது முகப்பிரகாசத்தால் பேரமைதி என்னை ஆட்கொண்டது!

இந்தப் புயலில் நான் அடைந்த மற்றொரு அனுபவம் என்னவெனில், என் இருதயம் துக்கத்தால் நிறைந்து, பேரிரைச்சலின்

*அலை, மீளமுடியாத துயரத்தின் ஆழத்திற்கு கொண்டு சென்றது! இந்த சரியான நேரத்தில்தான்,* **கர்த்தர் எழுந்து வந்தார்....** *மெல்லிய இனிய வார்த்தையினால்* **'அமரக்கடவது'** *என கூறிட, மாபெரும் அமைதி உண்டாகியது. என் உள்ளம் புளகாங்கிதம் அடைந்து* **'இது கர்த்தர்'** *என வெற்றியின் மெல்லிய சத்தத்தை நான் கேட்கும்படி செய்தது. ஆம், மெய்யாகவே இவரே நம் கர்த்தர்! என கூறி, களிகூர்ந்திடக்கடவோம்!*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## 'அகந்தை' புகழ் ஏற்கும் பிரசங்கியை எளிதில் தீண்டும்!

*முடிவுவரை 'தேவ கிருபையில்' நிலைத்திருங்கள்*

*இந்த பூமியில் நமக்கு எச்சரிக்கை செய்யப்படுவது 'பாவம்' போலவே அதற்கு சமமாய் 'பெருமை' இருக்கிறது! 'பாவம்' இரத்தாம்பர சிவப்பாய் இருக்கிறது.... 'பெருமையோ' ஓர் கவர்ச்சியான பளபளப்பாய் தோன்றுகிறது! இன்றைய திரளான கிறிஸ்தவர்கள்* **'இரத்தாம்பர சிவப்பான' பாவத்தை ஜெயித்தோம் என எண்ணிக்கொண்டு 'பளபளப்பான' பெருமையின் கேட்டில் விழுகிறார்கள்!** *இவர்கள் கூறிக்கொண்ட "பாவத்தின்மேல் வெற்றி" என்ற அறிக்கை பொய்யானதல்லவா? மதுகுடிப்பது பாவம்தான்.... ஆகிலும், இக்குடிகாரனை எதிர்த்துநிற்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் தேவன் இல்லை என்பதை அறிவீர்களா? ஏனெனில் இக்குடிகாரன் ஒருநாள் தன் அவலநிலையை ஒத்துக்கொண்டு, தேவனிடத்தில் திரும்பிவிடக் கூடும்!*

> **"இருப்பினும், இன்று அனேக ஜனங்கள் ஓர் பெருமையுள்ளவனைக் காட்டிலும் ஓர் குடிகாரனைத்தானே மோசமானவன் என எண்ணுகிறார்கள்?**

*தேவன் தங்களுக்கு சபையில்* **"விசேஷித்த வெளிச்சம்" கொடுத்திருக்கிறார்** *என சில பிரசங்கிமார்கள் எண்ணுவதுதான் அவர்களை எளிதில் உப்பச்செய்துவிடும்! விசேஷ வெளிச்சத்தைத் தாங்கிக்கொள்ளமுடியாத இவ்வித வேத பண்டித சகோதரர்களுக்கு, தேவன் 'தொடர்ந்து' விசேஷ வெளிச்சத்தைக் கொடுப்பாரோ? நிச்சயம் இல்லை! இன்று எண்ணற்ற வேத பண்டித பிரசங்கிகள் தங்கள் வாழ்வில்* **'தாழ்மை' என்ற வெளிச்சத்தைத்தான் பெறவில்லை!** *தன்னைத்தானே மனமுவந்து தாழ்த்தும் ஒருவனே நிச்சயமாய் உயர்த்தப்படுவான். தெளிந்த புத்தியுள்ள யாராயிருந்தாலும், "மனுஷனாகிய ஒருவன் தன்னைக்குறித்து மேன்மையாக எண்ணுவது தேவனுடைய பார்வையில் மகா அருவருப்பாயிருக்கிறது" என்ற உண்மையை கண்டுகொள்வான்!*

“ **தன் சொந்தநிலையை உணர்ந்து ஒத்துக்கொள்ளாத அகங்காரம் நிறைந்த ஓர் மனுஷனை, தேவனால் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?**

“தாழ்மை” என்ற இந்த பொன்னான பிரமாணம் உங்கள் வாழ்வில் உயர்வாய் காணப்படாவிட்டால், நீங்கள் எப்போதும் ஆத்துமத்திற்குரிய **மனுஷீக குணாதிசயத்திற்கு பின்மாறி** தேங்கி தங்கி விடுவீர்கள். இன்று எல்லோரும் அறிந்திருக்கிறபடி “தாழ்மையாய் இருப்பது நல்லதுதான்!” என்ற பொது அறிவு உங்களுக்கு கைகொடுக்காது! **“தாழ்மையே என் வாழ்வில் உயிர் மூச்சு”** என்ற உணர்வே சரியானதாகும். தாழ்மையில்லாமல் வெளிச்சத்தின் வாசலுக்குகூட ஒருவன் வர முடியாது! அல்லது, வெளிச்சத்தைப் பெற்று, பிற்காலங்களில் வெளிச்சத்தை இழந்த இவர்கள், வேதப்புத்தகத்தின் மீது துடிப்பான வாஞ்சையை இழந்திருக்கிறார்கள்! “நான் எல்லாவற்றையும் நன்றாகத்தான் செய்கிறேன்.... என்னில் தவறு என காண்பதற்கு ஒன்றுமேயில்லை” என அவர்கள் எண்ணினால், இதைவிட பெருத்த அபாயம் வேறெதுவுமேயில்லை எனலாம்.

“ **இனி நடப்பதென்ன?.... இவர்கள் தங்களை நியாயந்தீர்க்காமல், பிறரை நியாயந்தீர்ப்பதற்கே ‘பிரசங்கங்களை’ துளாவிக் கொண்டிருக்கும் இவர்கள், சந்தேகத்திற்கு இடமில்லாமல் அவபக்தியானவர்கள்!**

“நான் ஒன்றும் பெருமையாய் இல்லை” என இவர்கள் சிந்திக்கத் துவங்கலாம். ஆனால் அவர்களிடம் **தேவனுடைய கிருபை** காணப்படவில்லையே! அப்படியானால் என்ன? நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், நீங்கள் பெருமையுடையவர்கள்தான். ஏனெனில், தேவன் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையை தந்துகொண்டேதான் இருக்கிறார். நீங்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதற்கு முதல் அடையாளம், நீங்கள் பிறரை அவதூறு செய்து குறைகூறி நியாந்தீர்ப்பதற்குப் பதிலாக **உங்களைக் குறித்த உண்மை நிலையை அறிந்தவர்களாய்** மனங்கசந்து தேவனுக்கு முன்பாக நின்றிருப்பீர்கள்!

ஒரு மனுஷனுடைய ‘ஆவிக்குரிய வளர்ச்சியின் குறைவை வைத்தே’ இவன் எல்லோரையும் போலவே ‘அகந்தை கொண்டவன்’ என எளிதில் கண்டுவிட முடியும்! இன்று அதிகபட்சமான ஜனங்களும் ‘குறிப்பாக’ பிரசங்கிகளும் தாழ்மையாக இருப்பதேயில்லை! இறுமாப்பான சம்பாஷணை! பிறரை சிறுமைப்படுத்தும் சம்பாஷணை! தன்னை உயர்த்தி, பிறரை அசட்டை செய்யும் மனப்போங்கு! மனம் புண்படும் ஆத்திரங்கள்! உலக ஆதாயத்திற்கு இவர்கள் செயல்படுத்திய நேர்மையற்ற தந்திரங்கள்! இதுதவிர.... அவர்களின் மறைவான

பாவங்கள், ஆகிய அனைத்திற்கும் "**பெருமை என்ற வேர்**" பொருந்தும்! இவை அனைத்தையும் செய்துவிட்டு, இவர்கள் சிறுமைப்படுத்திய ஒருவரிடமும் இவர்கள் **மன்னிப்புகூட கேட்பதில்லை** என்பது, அவர்களின் பொதுவான இரட்சிப்பிற்கு ஏற்பட்ட அபாயம்!

எந்த நிலையிலும் 'என்னைத் தாழ்த்த' வேண்டுமே! தேவனிடமிருந்து 'கிருபையைப் பெற' வேண்டுமே! என்ற தேவனுக்குரியவைகளால் இவர்கள் ஆட்கொள்ளப்படுவதேயில்லை! தேவனோடு தங்களை சீர்ப்படுத்தாத இவர்கள் சந்தோஷமிழந்து ஜீவிக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், சந்தோஷமாக மாற முயல்வது கூட அவர்களால் இயல்வதில்லை.... ஏனெனில், இவர்களை தேவனே எதிர்த்து நிற்கிறார்! 'இவர் எவ்வளவு புகழ்பெற்ற பிரசங்கி' என முகதாட்சண்யம் பாராமல் கிரியை நடப்பிக்கும் கேடான இந்த பெருமையிலிருந்து, நாம் அனைவரும் ஜாக்கிரதை கொண்டு விழித்திருக்கக்கடவோம்!

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## 'முழு அர்ப்பணம்' கொண்ட கிறிஸ்தவன் எங்கே?

*அர்ப்பணம் குறையாதிருக்க 'தனது கடிகாரம் தந்து' உதவுகிறார்*

எனக்கு எது அதிக முக்கியத்துவம்? என்ற கேள்வி, மானிடர் அனைவரும் கேட்டுக் கொள்ள வேண்டிய மிகச் சிறந்த கேள்வி! இந்த உலகமும், இரு மனம் கொண்ட விசுவாசிகளும் 'எதை வேண்டு மானாலும்' இந்த கேள்விக்கு பதிலாகக் கூறிவிட முடியும்! ஆனால், தேவ பிரியர்களின் விடையோ "**நான் எந்த அளவிற்கு தேவனை விசுவாசித்து அவரை அன்புகூர்ந்தேனோ**" அதுவே, என்னைக் குறித்த அதிக முக்கியமானது..... என, கூறி மகிழ்வான்!

இப்படியெல்லாம், தேவனோடு அளவில்லாத முழுமையும், உத்தமும் கொண்ட வாழ்க்கை அற்புதமானது. ஆகிலும், இதற்கும் ஓர் விலைக்கிரயம் உண்டே! தேவனும் அவரைப் பற்றிய தேவபக்தியும் 'விலைக்கிரயத்திற்குப் பின்னால்தான்' ஒளித்து வைக்கப்பட்டுள்ளது! அந்த விலைக்கிரயம் கேளுங்கள்: தேவனோடு இவ்வித முழு அர்ப்பண, சீர் பொருந்திய அற்புத வாழ்க்கையை நாடும் உங்களுக்கு..... திரளான மனிதர்கள் மூலமாகவும் உங்களுக்குத் தொந்தரவு உண்டாகும் என்பதை மறவாதீர்கள்!

அன்று கிதியோன்படையில், அரை - குறை மனம் கொண்டவர்கள், தேவ சேனையைவிட்டு ஓடிப்போனது போலவே.... இன்றும்,

*விலைக்கிரயத்தை கேட்டவுடன், அனேக விசுவாசிகள் 'கிறிஸ்துவின் சேனையைவிட்டு' ஓடிப்போகிறார்கள்!*

*இவர்கள் கிறிஸ்துவின் சேனையை விட்டே ஓடி ஒளிந்தார்கள் என்றால் பரவாயில்லை! ஆனால் இவர்களோ 'தங்கள் சுய-விருப்ப சொந்த ஜீவியத்தை அணைத்துகொண்டு' கிறிஸ்துவின் சேனைக்குத் தூர நின்று..... தங்கள் அரை - குறை ஜீவியமும் சரிதான் என தேவ ஜனத்திடம் கொக்கரிக்கிறார்கள்!*

> **"அதுமாத்திரமல்லாமல், தங்களின் தரம் குறைந்த வாழ்விற்கு பல்வேறு வசனங்களை எடுத்துக் கூறி நியாயப்படுத்துகிறார்கள். திரள்கூட்ட மக்களும், இதுபோன்ற மாய்மாலத்திற்கும், வீழ்ச்சிக்கும் துணைபோகும் மாந்தர்களோடுதான் நிற்பதற்கு பிரியப்படுகிறார்கள்!**

*கேளுங்கள், நீங்கள் உங்களை நியாயப்படுத்த விரும்பும் வேத வாக்கியங்களைவிட, உங்கள் வேதகலா வித்தகத்தைவிட...... பிசாசானவன், நம்மில் யாரைக் காட்டிலும் கைதேர்ந்த "வேதகலா சாஸ்திரன்" என்பதை இன்று அறிந்துகொள்ளுங்கள்! சாத்தான் சிறந்த "வேதகலா சாஸ்திரன்" ஆனால், அவன் இன்றும் என்றும் 'பிசாசானவன்' என்பதையும் இன்று அறிந்துகொள்ளுங்கள்!!*

*முழு அர்ப்பண ஜீவியம், முழு அர்ப்பண ஊழியம் என்ற 'கடிகாரத்தை' தேவன் உங்களுக்கு கொடுத்திருந்தால் "தேவரீர் உம்முடைய நேரம் என்ன?" என்றே கேட்டு வாழுங்கள்...... ஊழியமும் செய்யுங்கள்! அதுவே தேவனை கனம்செய்திடும் அற்புத வாழ்க்கை! அது இல்லாமல், 'உங்களுக்கு ஏற்ற நேரத்தை விரும்பி' அந்த கடிக்காரத்தை, தவறாய் பயன்படுத்தாதீர்கள்!!*

*நான் இன்றும் என்றும் கேட்பதெல்லாம், கிறிஸ்தவம் விழித்துக் கொண்டதா? என்றல்ல! அங்கும் இங்கும் **'கிறிஸ்தவன்' விழித்து கொண்டானா?** அவன், அந்த 'முழு கிறிஸ்தவனாய்' மாறிவிட்டானா? என்ற கேள்வியே என் நெஞ்சத்தை வாட்டுகின்றது..... அந்த 'முழு கிறிஸ்தவன் எழும்பிவிட்டால்' கிறிஸ்துவின் சேனைக்கு அவர்கள் போதும்!*

*புரையோடிப்போன 'கிறிஸ்தவத்தை' மாற்ற அவர் வரவில்லை! அதை என்றோ அவர் புறக்கணித்துவிட்டார்! ஆனால், அவர் உங்களைப் புறக்கணிக்கவில்லை..... நீங்கள் 'முழு கிறிஸ்தவனாய்' ரூபமடையவும், உங்களைச் சுற்றிய மற்றவர்களை மாற்றமடையச் செய்கிறவர்களாய் நீங்கள் மாறிடவும், உங்களுக்காக காத்திருக்கிறார்!*

*- A.W.டோசர்*

## ‘அன்பும், விசுவாசமுமே’ தேவனை கிட்டிச்சேர இரு சிறகுகள்!

*‘சுய முயற்சி நீதியை’ தேவன் ஏற்றுக்கொள்வதில்லை*

நம்மோடு கொண்ட தேவனுடைய அணுகுமுறை மகா இரகசியமாகும். அவருடைய இரகசிய நடவடிக்கைகளை கற்றுக் கொள்ள ‘பாலகர்களால் மாத்திரமே’ முடியும். இந்த உலகில் பட்டம் பெற்று, இந்த உலக மேன்மையைக் கொண்டு தலைதூக்குபவர்கள்..... அதைக் கொண்டு, தங்களை ‘கர்த்தருடைய ஆலோசகர்களாக’ எண்ணிக் கொண்டவர்களுக்கும் ‘ஞானவான்களுக்கும்’ அவர் தம் இரகசியத்தை ஒளித்துவைக்கிறார்! ஏனெனில், இதுபோன்ற தங்கள் கல்வி சாமர்த்தியத்தால், வேத பண்டிதத்தால், அளக்கமுடியாத தேவத்துவத்தின் ஆழங்களை, தங்களால் அளந்திட முடியுமென எண்ணுகின்ற அகந்தையான எண்ணங்களை தேவன் அருவருக்கிறார்! ஆம், திவ்விய ஞானம் மறைவிடத்தில் ஒளிந்திருக்கிறது! இவர்கள் இந்த உலக ஞானத்தில், வேத பண்டிதத்தில், எத்தனை பிரகாசமாயிருக்கிறார்களோ.... அந்த அளவிற்கு, தெய்வீக ஞானம் அவர்களை விட்டு தூரமாய் சென்றுவிடும்!

> “ **‘மனுஷன்’ என்றாலே, தேவத்துவத்திற்கு முற்றிலும் மாறான திசையே யாகும். ‘அவன்’ நன்மையை தீமையென்று கூறிவிடுவான்! ‘அவன்’ தீமையை நன்மையென்றும் கூறிவிடுவான்! இவைகளையே ‘நீதி யாகவும்’ நாம்கூட எண்ணிக்கொள்ள முடியும்! தேவனுடைய பார்வை யிலோ, இதுபோன்ற மனுஷநீதி அருவருப்பாகவே இருக்கிறது!**

இவ்வுலகில், தங்கள் சொந்த கண்களுக்கும், மற்றவர்களுடைய கண்களுக்கும், தங்களை நீதிமான்களாக வைத்துக் கொள்ள, யாருக்குத்தான் மகிழ்ச்சியிருக்காது? இதுபோன்ற தங்கள் நீதி தேவனைப் பிரியப்படுத்தக்கூடுமோ?..... என சிந்திப்பதுகூட இல்லை! ‘இதுபோன்ற மனுஷருக்குரிய நீதி’ புறாவின் வடிவத்தில் ‘வல்லூரின்’ இருதயத்திற்குள் மறைந்து கொள்ளும் செயலேயாகும்! மிகவும் நேசமுள்ள தேவன், இந்த கொடிய வல்லூருகளை மிகவும் வெறுக்கிறார்!

இந்த சுயநீதி கொண்டவர்களை இயேசு பார்த்து “வியாதியஸ் தர்களுக்கே வைத்தியன் தேவை! உங்களைப் போன்ற மாய்மாலக் காரர்களை நான் நாடித் தேடவில்லை” எனக் கூறினார். அன்பே ஊற்றாயிருப்பவர் நம் தேவன்! ஆகிலும், நம் ஆண்டவர் தன்னையே விலையாகக் கொடுத்து வாங்கிய இரட்சிப்பை, **இந்த சுய-நீதிமான்களுக்கு அல்ல.... ஏழைப் பாவிகளுக்கே** தந்துவிட மனதுருக்கம்

*கொண்டிருக்கிறார்! ஏனெனில், தன்னை நிர்ப்பந்தமான பாவியென உணர்ந்து, தன் பாவ நிலையின் கொடூரத்தை உணர்ந்தவன் மாத்திரமே,* **தன் பெரும் துயரத்தில், தன் இரட்சகரின் கரத்தில் சாய்ந்து விடுகின்றான்.** *இவர்களுக்கே தன் இரட்சிப்பைத் தந்துவிட தேவன் வைராக்கியம் கொண்டிருக்கிறார்! அந்த, சுய-நீதி கொண்டவர்களுக்கு அல்ல!*

> **"இதற்கு நேர்மாறாக, ஏழை பாவிகளோ 'தங்கள் விசுவாசத்தையும் தெய்வ அன்பையும் சிறகுகளாகக் கொண்டு' பறந்து சென்று, தங்கள் இரட்சகரின் மார்பிலே சாய்ந்துகொள்கிறார்கள்! அந்த இரட்சகபெருமான் தனது ஈவாய், தனது அனைத்து வாக்குதத்தங் களையும் அவர்கள்மீது பொழிந்து விடுகிறார்!**

*இதுபோன்ற ஏழை பாவிகளில் ஒருத்திதான்* **மகதலேனா மரியாள்.** *அவளின் அதிகமான பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்கு* **'தெய்வ அன்பே' காரணமாகும்.** *அவளின் விசுவாசமும் அன்புமே தேவ நீதியாக கருதப்பட்டது! ஆகவேதான், ஆபிரகாம் வழிவந்த முற்பிதாக்கள் நீதிமான்களாய் வாழ்ந்தார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகிலும், அவர்களின் நீதியான வாழ்க்கையைவிட, அவர்களுடைய விசுவாசமும், தேவன் மீது கொண்டிருந்த சொல்லி முடியா அன்புமே, போற்றுதலுக்குரியதாக மாறியது!*

*'**தா**ன்' என்ற அகந்தையில் கட்டப்பட்டவைகளை தேவஞானம் உடைத்து சிதைத்து விடுகிறது! பின்பு அந்த சிதைக்கப்பட்ட இடத்தி லிருந்து தேவ ஞானம் தனது மாளிகையை கட்டி எழுப்புகிறது!*

*மேற்கண்ட* **"தேவ உறவுக்குரிய" அஸ்திபார சத்தியங்களை** *உங்களால் விளங்கிக்கொள்ள முடிகின்றதா? வான் உயர்ந்து தேவனோடு சஞ்சரித்து வாழ, உங்களுக்கு சிறகுகள் தேவை...... விசுவாசத்திற்கும், தெய்வ அன்பிற்குமே இந்த சிறகுகள் உண்டு என்பதை நான் திட்டமாய் அறிந்திருக்கிறேன்! கர்த்தர் கிருபை செய்வாராக!*

*- மேடம் குயான்*

---

## 'நம் ஏழை தகப்பனையல்ல' பரம தகப்பனை விசுவாசிக்கிறோம்!

*கவலை, தெய்வ பண்பு அல்ல*

**ஆ**ண்டவர் இயேசு, "இந்த ஜீவனுக்காக" நாம் ஏன் கவலைப்பட கூடாது? என்பதை வலியுறுத்த மூன்று காரணங்கள் கூறினார்:

i. நமக்கு பரம தகப்பன் இருக்கிறபடியால், கவலை தேவையற்றது!

ii. நாம் விசுவாசம் பெற்றபடியால், கவலை பண்புள்ளது அல்ல!

iii. நாம் எதிர்காலத்தை சிந்திக்காதபடியால், கவலை ஞானமற்றது!

முதல் பகுதி : **நமக்கு சொந்த தகப்பன் இருக்கிறபடியால், கவலை தேவையற்றது.**

நம் அடிப்படை தேவைகளுக்காக 'பணத்தைக் குறித்து' கவலைப்படுவது நிச்சயமாய் தேவையற்றது. பரலோகத்தில் நமக்கு பிதா இருக்கிறபடியால், எதை புசிப்பது? என்னத்தை குடிப்பது? எதை உடுத்துவது? என, நாம் கவலைப்படுவதில்லை! என்னுடைய பிள்ளைகள், அவர்களுடைய அடுத்த உணவு எப்போது கிடைக்கும்? உடுத்துவதற்கு உடை கிடைக்குமா? படுத்துறங்க படுக்கை கிடைக்குமா? என்று ஒருபோதும் கவலைப்பட்டதேயில்லை. அதற்கு ஒரே காரணம் 'தகப்பனாகிய நான் யார்?' என்பதை நன்றாய் அறிந்திருக்கிறார்கள். நிதர்சனமான உண்மை என்னவென்றால், 'உலக தகப்பனுடைய உத்தமம்' தேவனுக்கு சமமானது அல்ல! என்பதுதான்.

> "
> **ஓர் ஏழை தகப்பன் தன் பிள்ளைகளுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் தேவன் நம்மை கண்டிப்பாய் போஷிப்பார் என்ற விசுவாசம்கூட அநேகரிடத்தில் இருப்பதில்லை!**

தேவன் என்னுடைய அன்புள்ள தகப்பன் என்ற பகுதியை: 1)என் சொந்தமானவர் 2) என்னை ஆளுகை செய்பவர் 3) என்னை போஷிப்பவர் என நீங்கள் வகையறுத்து பிதாவை அறிந்திருந்தால், 'இனி கவலைப்படுவதற்கு யாதொன்றும் இல்லை' என்பது உங்களுக்கு மிகத் தெளிவாய் விளங்கியிருக்கும். இதைக் கோடிட்டு காட்டியே, ஆண்டவர் இயேசு கூறுகையில் "ஒரு மகன் தகப்பனிடத்தில் அப்பத்தை கேட்டால் கல்லை கொடுப்பானோ? மீனைக் கேட்டால் பாம்பை கொடுப்பானோ? பொல்லாதவர்களாகிய நீங்கள் 'நல்ல ஈவுகளை கொடுக்க' அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கும் உங்கள் பிதா தன்னிடத்தில் கேட்கும் மகனுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" என்றார் (மத்தேயு 7:9-11). இவ்வாறு "சகலமும் தேவனுடைய ஆளுகைக்கு வந்துவிட்டால்" என் பிள்ளைகளுக்குரிய தேவைகளையும் அவரே பொறுப்பெடுத்துக்கொள்வார்! இதை வலியுறுத்தி, இயற்கையின் மூன்று பகுதிகளை கவனித்துப் பார்க்க நம்மை அழைத்தார்:

*தன்னுடைய சிருஷ்டிப்புகள் அனைத்தையும் தேவனே போஷிக்கிறார்!*

மத்தேயு 6:26-ம் வசனத்தில் "ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவைகளை உங்கள் பரம பிதா போஷிக்கிறார். அந்தப் பறவைகளை காட்டிலும் நீங்கள்

அதிக விசேஷித்தவர்கள் அல்லவா?'' என்றார். அன்று கலிலேயா பள்ளத்தாக்கில் **நாடு விட்டு நாடு இடம் பெயர்ந்து செல்லும் பறவைகள்** கூட்டங்களை இயேசு அறிவார்! இந்த வார்த்தைகளை அவர் கூறும்போது, அந்தப் பறவை கூட்டங்கள் பறந்து செல்வதை காண்பித்திருக்கக்கூடும். இவ்வாறு பறவைகளைப் பார்த்து நாம் கற்றுக்கொள்ள அவர் விரும்பிய ஓர் உண்மை என்னவென்றால் ''அந்த பறவைகள் கூட்டங்கூடி நாம் என்ன செய்வது? நம் ஜீவன் பிழைத்திட இடம் விட்டு இடம் செல்ல இருக்கிறதே!'' என ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வதில்லை. அதுபோன்ற காரண காரியங்களை பேசிக்கொள்ள அந்தப் பறவைகளுக்கு போதுமான யுக்தியும் கிடையாது! அதற்கு பதிலாக, ''இவ்வேளையில் பிழைத்து வாழ, இதுவே நமக்கு அருளப்பட்ட வழி'' என்ற உணர்வை தெய்வீகமாய் இந்தப் பறவைகள் பெற்றிருக்கின்றன!

தேவன் ஜீவனை மாத்திரமா சிருஷ்டித்தார்? அவைகள் பிழைத்து வாழவும் வகை செய்தார்!

யோபு 38:41; சங்கீதம் 147:9 வசனங்கள் கூறுவது என்ன? பிறந்த குஞ்சுகளும், பிறந்த குட்டிகளும் கூட தன்னுடைய உணவுக்காக தேவனையே நோக்கிப் பார்க்கின்றன என காண்பது மிகுந்த பரவசம் அல்லவா? அவைகள் விதைக்கவோ அல்லது அறுக்கவோ அல்லது களஞ்சியத்தில் சேர்த்து வைக்கவோ இல்லை. நடந்த ஒரே ஒரு செயல் என்னவென்றால்: அந்த குஞ்சுகளின் சத்தத்தை தேவன் கேட்டார், கேட்டவுடன் அவைகளுக்கு உணவு அருளித் தந்தார்! இந்த அற்புத வசனங்களை, ஒருவன் தன்னுடைய சோம்பேறித்தனத்துக்கு கையாண்டு விடக்கூடாது. எங்காவது ஒரு பறவை குஞ்சு, மரத்தின் கிளையில் 'சும்மா வாயை திறந்து கொண்டு' இருப்பதை நீங்கள் பார்த்தது உண்டா? அந்த குஞ்சுகளுக்கு தேவையான உணவை வாசலில் வந்து அவர் கொட்டியது இல்லை. அதற்கு பதிலாக, **உணவை கண்டுபிடிக்கும் சமயோசனையை** (instinct) அந்த பறவைகளின் புத்தியில் தந்திருக்கிறார். அவைகள் அங்கும் இங்கும் அலைந்து தேடிச் சென்று, சிறுசிறு பூச்சி உணவுகளை புசிக்கின்றன! மிக நேர்த்தியாய் தன் கூடுகளை தன் குஞ்சுகளுக்காய் கட்டுகின்றன! அவைகள் பறக்க கற்றுக்கொடுக்கின்றன! கால சூழ்நிலை மாற்றத்தில், இடம் பெயர்ந்து செல்லவும் வழிவகுக்கின்றன!

இவை அனைத்தும் செய்தாலும், ''முன்கூட்டியே அதிகபட்சமாய் சேகரித்திட'' அந்த பறவைகள் முயற்சித்தது இல்லை. ''ஒரு பறவை தனக்குரிய அளவைவிட பெரிய கூடுகட்ட எண்ணுவதும் இல்லை!

*தேவைக்கு அதிகமான உணவு பூச்சி இனங்களை முன்கூட்டியே சேர்த்து வைப்பதுமில்லை!"*

"**ஆம், தேவன் வகுத்த எல்லைக்குள்ளாக மாத்திரமே, இந்த பறவை இனங்கள் மகிழ்ச்சியோடு தங்கி சுகமாய் வாழ்கின்றன!**

*இந்த அற்புத பறவைகளை, யாரோ சிலர் பிடித்து கூண்டில் அடைத்து தீனி போட்டால் மாத்திரமே, பறவையின் அழகிய உடல் பருமனாகி, கொழுப்பு சேர்ந்து விடுகின்றன! இப்படித்தான் பரிதாபம் நடப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அது, காசு கொடுத்து கூண்டில் அடைபடும் பறவைகளுக்கு ஏற்பட்ட பெரு நஷ்டம்! தேவன் அந்த பறவைகளை பொறுப்பாய் கவனித்து கொள்ள, அந்த பறவைகள் கவலை கொள்வதற்கு எந்த காரணமும் இல்லை!*

*- ஜான் மேக் ஆர்தர்*

---

## அவரது ஜீவிய அடிச்சுவடே, நமது பரிபூரணம்!

*இயேசுவை நோக்கிப் பார்த்து வாழ்வது, பாக்கியம்*

*பல இடங்களிலும், பல சமயங்களிலும், பல விஷயங்களைக் குறித்து பலரோடு இயேசு பேசினதே, சுவிசேஷ உபதேசமாயிற்று! எவரெவருக்கு என்னென்ன வேண்டுமோ, அவைகள் அந்தந்த நிமிஷத்தில் அவரிலிருந்து தாராளமாய் புறப்பட்டு வந்ததே ஆச்சரியம்! அவர் அவ்வளவாய், தன் 30-ஆண்டு கால* **நாசரேத்தூர் ஜீவியத்தில்** *"தேவத்துவத்தின் பரிபூரணத்தால்" நிறைந்திருந்தார்! யார் யார் குழாயைத் திருப்புகிறார்களோ, அவரவருக்கு வேண்டியமட்டும் தண்ணீர் பாய்வதுபோல, தேவனுடைய சகல பரிபூரணமும் நிறைந்த திருக்குமாரனிலிருந்து* **ஜீவவெள்ளம் புறப்பட்டது!** *யார் மறு வார்த்தை பேசினார்கள்? எந்தக் கேள்விக்குத்தான் அவர் உத்தரவு சொல்லாதிருந்தார்? அத்தனையும் பொக்கிஷங்கள்!*

*ஜனங்கள் அவருடைய உபதேசத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டார்கள். உள்ளத்தில் பொறாமை கொண்ட பரிசேயரும் ஏரோதியரும்கூட, அவரைப் பார்த்து: "நீர் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாகப் போதிக்கிறீர்" என்று ஒத்துக்கொண்டார்கள்! "இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்களை எப்படி அறிந்திருக்கிறார்" என்று யூதர்கள் பிரமித்தார்கள்! அவர் பேசின ஞானத்தைக் குறித்து நாசரேத்தூரார் ஆச்சரியப்பட்டார்கள்! ரபீ "நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர்" என்று நிக்கொதேமு புகழ்ந்தார்! "அந்த மனுஷன் பேசுகிறதுபோல் ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை" என்று*

*அவரைப் பிடிக்கப்போன போர்ச்சேவகர் சொன்னார்கள்!*

> "
> **அவர் வார்த்தையில் "ஜீவியத்தின்" வல்லமையுண்டென பிசாசுகள் அறிந்து, அவர் உத்தரவுக்கு நடுங்கி நின்றன. "ஆண்டவரே, நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்று** *பேதுரு அறிக்கையிட்டார்!*

*"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன" என்று இரட்சகர் தாமே சொன்னார். இவைகளைச் சுருக்கிப் பார்க்கும்போது, ஆண்டவர் பேசின உபதேசத்தில் அறிவு, ஆவி, ஞானம், சத்தியம், ஜீவன், புதுமை, தெய்வீகம் ஆகிய அனைத்து 'தெய்வீக பரவசமும்' விளங்கினதென்பது நிச்சயம். அக்காலத்தில் மாத்திரமல்ல, இந்நாள்வரை அதன் உண்மை ரூபிக்கப்பட்டு வருகிறது.*

**கிறிஸ்து ஞானமுள்ள போதகர். அவர் செய்த உபதேசம் உத்தேசமான தல்ல! அத்தனையும் "ஜீவ ஊற்று"** *மனுஷர் உள்ளத்திலிருப்பதை அவர் அறிந்திருந்தார். மற்றவர்களைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சொல்லவேண்டியதில்லை! ஒவ்வொருவருடைய இருதயத்தின் தன்மையையும், மறைவான ஜீவியத்தையும், அவர் திட்டமாய் அறிந்திருந்ததால், அவர் பேச்சில் அவ்வளவு ஜீவ வல்லமையிருந்தன!*

*நாத்தான்வேலைப் பார்த்து: "நீ அத்திமரத்தின் கீழிருந்தபோது உன்னைக் கண்டேன் என்றார்!" நீர் எங்கேபோனாலும் நான் உம்மை பின்பற்றி வருவேன் என்று சொன்னவனுக்கு 'அது உன்னால் கூடாது' என்றார்! நான் போய் திரும்பிவந்து, உம்மைப் பின்பற்றுகிறேன் என்று சொன்னவனுக்கு, 'உடனே பின்பற்று' என்றார்!* **வருகிறேன்** *என்றவனை ஏற்றுக்கொள்ளக் காணோம்,* **போகிறேன்** *என்றவனைச் சேர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்! அவர்களிருவரையும் அவர் அறிந்திருந்தார்!*

*ஆராதனை விஷயங்களைப் பேசித் தன் பாவத்தை மறைத்தவளுக்கு: "நீ போய் உன் புருஷனை அழைத்துக்கொண்டு வா" எனக்கூறி உணர்த்தினார்! சீஷர்கள், வழியில் தங்களுக்குள் தர்க்கித்ததை, அவர்கள் சொல்லாமலே அறிந்துகொண்டு, அவர்கள் தப்பிதத்தையும் உணர்த்தினார்! வேதபாரகரைப் பார்த்து: "உங்கள் இருதயங்களில்" இப்படிச் சிந்திக்கிறதென்ன? என்று கேட்டார். அநேக வியாதிக்காரர்கள் 'பெதஸ்தா' குளத்தை சூழ்ந்திருந்தாலும், 'தன்னைக் குளத்தில் கொண்டுபோய்விட ஆள் இல்லையே' என்று நெடுங்காலம் தனக்குள் எண்ணிக்கொண்டிருந்தவனைத் தேடிப்போய், அவனை குணமாக்கினார்! மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் அறிந்தவராகப் பேசினதே, ஜனங்களுக்கு ஆச்சரியம்!* **ஆம், அது ஜீவ ஒளியின் பிரகாசம்!** *பூமியில் திவ்ய வாழ்க்கை வாழ்ந்த, தெய்வீக பின்னணி! அதுவே,*

*நாம் தொடர்ந்திட வேண்டிய ஜீவ அடிச்சுவடு! ஆம், வெறும் வார்த்தைகளாய் இருந்துவிடக்கூடாது!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## 'செயலாற்றும் ஊழியத்திற்கே' வரம் தரும் ஆண்டவர்!

*'வரம் செயலாற்றிட' பக்தி வைராக்கியம் வேண்டும்*

*"**உ**ற்சாகத்துடன் இரக்கம் செய்தல்" எனும் வரம் நமக்கு எவ்வளவு இன்றியமையாதது (ரோமர் 12:8). பொறுமையிழக்கச் செய்யும் வேளைகளில், கர்த்தருக்கு பணி செய்யும் சகோதர சகோதரிகளின் முகங்களில் காணப்படும் புன்முறுவலே அவர்கள் பெற்ற ஊழிய வரத்திற்கு நிரூபணம்! இவ்வித ஊழியத்திற்கு "வஞ்சனையில்லாமல் கொடுத்தல்" என்பது தேவையான இன்னொரு வரம் என, இதே வசனம் கூறுகிறது (ரோமர் 12:8). இவ்விதப் பொறுப்புகளை,* **ஊழிய அழைப்பு இல்லாமல்** *நிறைவேற்றுவது சாத்தியமில்லை (ரோமர் 12:7). மனித உடலின் உறுப்புகளைப்போலவே, பெற்ற வரங்கள் தானாகவே இசைவாய், இயற்கையாய், இயற்கைக்கு அப்பாற்பட்டும் செயல்படும்!*

> **"தேவையுள்ள இடங்களுக்கும், தேவையான மக்களிடமும் விரையுங்கள். மக்களின் தேவைகளால் தேவன் மனதுருகியது போலவே, நீங்களும் மனதுருகும் அந்த வேளையில், தமது வரங்களை தேவன் வெளிப்படுத்துவார்!**

*நோயாளிகள் இருக்குமிடத்தில்தான் வைத்தியர் இருக்கவேண்டும். "தேவனாகிய கர்த்தர் மனிதருக்குள் வாசம் பண்ணும் பொருட்டு, துரோகிகளாகிய மனிதருக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்" என்று ஆவியானவர் மூலமாய் கிறிஸ்து பொழிந்தருளிய வரங்களைக் குறித்து, தாவீது தீர்க்கதரிசனமாய் உரைத்தார் (சங்.68:18,19).*

*பெரும்பாலும் 'கிறிஸ்தவர்களே' பங்குபெறும் கூட்டங்களில், அற்புதங்கள் குறைவு! மாறாக, கிறிஸ்தவரல்லாதோரிடையே நடக்கும் நற்செய்திப் பணிகளில் குணமாகுதலும், அற்புதங்களும், சாதாரணமாய் தோன்றும்! இரகசியம் என்ன? இதைக் குறித்து, ஏசாயா கூறும்போது, "என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன்! இஸ்ரவேலரைக் குறித்தோ.... கீழ்ப்படியாதவர்களும், எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள்முழுதும் என் கைகளை நீட்டினேன்" என்றே கர்த்தர் வாஞ்சித்து, அங்கலாய்த்தார்! (ரோமர் 10:20,21).*

*கிறிஸ்து உதித்தார், உயிர்கொடுத்தார், உயிர்த்தெழுந்தார்*

என்று பெயர் கிறிஸ்தவர்களுக்கு ஏற்கனவே தெரியும். அவர்களுக்கு வேண்டியது சுவிசேஷ அற்புதங்களல்ல, தீர்க்கதரிசன எச்சரிப்புகளே! (மத்.12:38,39). மனந்திரும்ப மறுக்கும், வணங்கா கழுத்துள்ள, கிறிஸ்தவ சமுதாயங்களுக்குத் திரும்பத் திரும்ப அற்புதங்களைச் செய்ய கிறிஸ்து விரும்புவதில்லை! கானாவூர், கோராசின், கப்பர்நகூம் ஆகிய இடங்களிலுள்ளோரின் இதயக் கடினத்தை இயேசு வன்மையாய் கடிந்துகொண்டார் (யோவான் 4:46-48, மத்.11:20-24).

*கிறிஸ்துவின் பெயரே சொல்லப்பட்டிராத பிராந்தியங்களுக்குச் செல்லுங்கள்! தாழ்த்தப்பட்டோரைச் சந்திக்க கிராமங்களுக்குப் புறப்படுங்கள்! வெள்ளம், பஞ்சம், இன்னும் இதுபோன்றவற்றால் பாதிக்கப்பட்டு நலிந்துகிடப்போரைச் சந்திக்க விரையுங்கள்! தொன்றுதொட்டு மூடப்பழக்கங்களுக்கும் பயங்களுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிவாசிகளைச் சந்திக்கக் காடுமலை களுக்குள் ஊடுருவுங்கள்! இவ்விதம் "தரித்திரருக்கு" அதாவது சந்திக்கப்படாதோர், சிந்திக்கப்படாதோர் ஆகியோருக்கு நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கையில் அற்புத வரங்கள் நிச்சயமாய் செயல்படும்! (லூக்கா 7:22; 4:18,19).*

"

**வரங்கள் அருளப்படுவது நமது தகுதியைப் பொறுத்ததல்ல என்பது உண்மையாயினும், வரங்களை அப்பியாசித்து கையாண்டிட நமக்கு ஆன்மீகப் பொறுப்பு அதிகமுண்டு!**

இந்த உலக ராஜ்ஜியத்திற்குரிய படைவீரர் காலைதோறும் உடற்பயிற்சி செய்வர். அது எவ்வேலைக்கும் அவர்களை ஆயத்தமா யிருக்கச் செய்யும். நாமும் **பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி** நம்மை உறுதியாய்கட்டியெழுப்பவேண்டும்(யூதா20). அவியாத அக்கினி, நமது தியான பலிபீடத்தில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும் (லேவி.6:12,13). "வெளியே" வந்து மக்களை ஆசீர்வதிக்குமுன், **மோசே** "உள்ளே" சென்று தேவனை ஆராதித்தான் (லேவி.9:23).

ஆவிக்குரிய வரங்கள், ஆயுதங்கள் போன்றவை: "**ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும்**" அவைகள் எண்ணெய் பூசி, கூர்மையாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும் (மத்.17:19-21). கிரமமான வேத தியானத்திற்கும், ஆராய்ச்சிக்கும் போதுமான நேரம் செலவழிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் வரங்களைச் சரியாய் பயன்படுத்தவும், தவறாய் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் ஞானம் பெறுவோம்!

*- R.ஸ்டான்லி BYM*

## பக்க வழியாய் திருடப்படும் 'விசுவாசத்திற்காக' போராடுங்கள்!

*மகா பரிசுத்த விசுவாசம் கட்டப்படுவதாக*

*"பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை* **(ஒரே தரம்)** *ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்கு" குந்தகம் ஏற்படும் சமயங்களில், அதற்காக தைரியமாய் போராட, யூதா தன் நிருபத்தில் புத்தி கூறினார்! (யூதா3). இந்த வசனத்தின் முக்கியத்துவம் "நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி "***ஒரே தரம்*** *இயேசு பலியிடப்பட்டார்" என்ற வசனத்திற்குஒப்பானது!*

"

**"பொதுவான இரட்சிப்பிற்கு உள்ள விசுவாசத்தை" இங்கு யூதா குறிப்பிடவில்லை எனவும், அது நம் எல்லோருக்கும் பொதுவான "கிறிஸ்துவின் சாயலை" நாம் அணிந்து, அவரைப்போலாகும், நமது இரட்சிப்பின் நிறைவேறுதல்! அதற்குப் போராடுதல் தேவையில்லை, சுயத்தை சிலுவைக்கு ஒப்புக்கொடுப்பதே பிரதான தேவை!**

*அது, இயேசுவைப்போலவே இந்த 'பொதுவான இரட்சிப்பின்' விசுவாச ஓட்டத்தை ஓடி, அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து, நாமும் பிதாவின் வலதுபாரிசத்தில் அமரும் ஒப்பற்ற ஜெய வாழ்க்கை! அதற்கும், இயேசுவே நமது "விசுவாசத்தின் துவக்கமும் முடிவுமாயிருக்கிறார்" (எபி.12:1-4).*

**இவ்வித ஒப்பற்ற சுவிசேஷத்தின் ஆவிக்குரிய ஜீவியம் கொண்டவர்கள் மாத்திரமே, அவர்களுக்கு "ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம்" தாக்கப்படும்போது 'தைரியமாய்' போரிடுங்கள்! என யூதா அழைத்த போர்க் குரலின் தூய்மையான உத்தமத்தை அறிந்திருப்பார்கள்! (வசனம் 3).**

*தேவனையும், நம்மை ஆண்டு நடத்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலித்திட நடத்தும் "பக்க வழியாய் நுழைந்த சில மனுஷர்கள்" ஆகிய இவர்களையே "For Certain MEN have crept Unnoticed" என 4-ம் வசனத்தில் எச்சரிக்கை விடுத்தார்! நமக்கும், தேவனுக்கும் உரிய "ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தை" திருடும்படியே, இவர்கள் பக்கவழியாய் நுழைந்திடுவார்கள்! (வச.4). தேவனுடைய கர்த்தத்துவத்தை (ஆளுகையை) அகற்றி "***மனுஷீக ஆளுகையை*** *" கொண்டுவர துடிப்பவர்கள்! எகிப்திலிருந்து கர்த்தரால் இரட்சிக்கப்பட்டாலும், அவரையே தொடர்ந்து விசுவாசியாமல், மனுஷீக 'பொன் கன்றுக்குட்டியை'* **இதுவே** *தங்களை நடத்தும் யெகோவா என, சேதமடைந்தவர்கள்! (வச.5).*

*கர்த்தத்துவத்தை அசட்டை செய்யும் இவர்கள், கர்த்தரையே நம்பி வாழும் பரிசுத்தவான்களை "தங்களுக்கே தெரியாத*

*அல்லது தாங்களே வாழாதவைகளை" வைத்து தூஷிக்கவும், தொடங்குவார்கள் (வசனம் 10). அவர்களின் கேடுபாடுகள்: 1) காயீனைப்போல் பகை உணர்வுகொண்டதாயும் 2) "லாபம் கருதி" வழி தப்பிய பிலேயாமின் வஞ்சனை கொண்டதாகவும் 3) கோராவைப்போல் "தலைமை விரும்பிகளாயும்" மாறி, கெட்டுப்போனார்கள் எனவும் வாசிக்கிறோம் (வச.11). இவர்களின் செயல்பாடுகள் 'அவபக்திக்குரிய வழியாகவே' அவபக்தியான கிரியை நடப்பிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்! (வச.14).*

இவர்கள், தாங்கள் விரும்பியதைச் செய்து முடித்திட வெகு தீவிரமுடையவர்களாய், சுயலாபத்திற்காக முகஸ்துதி செய்பவர்களாய், தாங்கள் விரும்புகிறபடியெல்லாம் 'பரியாசம்' செய்கிறவர்களாயும் இருப்பார்கள்! (வச.16,18). எல்லாவற்றிற்கும் மேலாக, இவர்கள் **"பரிசுத்த ஆவியில் அபிஷேகம் பெறாதவர்களாய்"** இருப்பதால் **'பிரிவினையும், பிரிந்து போகச் செய்பவர்களாயும்'** இருப்பார்கள்! ஆகவே, இப்படிப்பட்ட 'விசுவாச துரோகங்களை' எதிர்த்து நின்றிடவே நாம் அழைக்கப்படுகிறோம்! அதற்கு மாறாத ஒரே வழி: "நாம் இந்த மகா விசுவாசத்தின்மேல் நம்மை உறுதிப்படுத்திக்கொண்டு, (Building yourselves on your most Holy Faith) பரிசுத்தாவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களை காத்துக்கொள்ளுங்கள்!" என தீவிரமாய் புத்தி கூறினார்! (வச.19,20,21). அவ்வாறு உங்களை காத்துக்கொண்டால் மாத்திரமே 'பிரிவினையின்' கொடூரத்திற்குப் பதில் "கட்டப்படும்" ஊழியம் நிறைவேறும்! மேலும், நீங்கள் சரியாகப் பகுத்தறிந்து, விசுவாச துரோகத்தில் வீழ்ந்துவிட்ட "சிலரையாவது இந்த அக்கினியிலிருந்து மீட்டு இரட்சித்திட முடியும்!" என்ற பொறுப்பை உணர்த்தினார் (வச.22).

*முடிவாக, "ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக இவர்கள் போராடியதின்" மாபெரும் விளைவு என்னவென்றால்: நாம் வழுவாதபடியும், மாசற்றவர்களாயும், நிலைநிறுத்த வல்லமை யுள்ளவர் நம் கர்த்தர் ஒருவரே! நமது மகிமையான அவரின் சந்நிதானம்! அவர் ஒருவரே ஞானமுள்ளவர்! அவர் ஒருவருக்கே கனமும்! அவர் ஒருவருக்கே மகத்துவமும்! அவர் ஒருவருக்கே வல்லமையும்! அவர் ஒருவருக்கே அதிகாரமும்! ....என்ற வெற்றியின் முழக்கத்தை, இப்பூமியில் பெற்றவர்கள் மாத்திரமே, அதை நித்தியமாய் பெற்று ஆனந்தித்திட முடியும்!* ***இந்த மகத்துவ ஜெயம்: "தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்திற்காக போராடியவர்களுக்கே" கர்த்தர் வழங்குகிறார்! ஆமென்.***

- T.ரத்தினகுமார்

## ‘அன்பின் தேவனை’ வெளிப்படுத்தி காண்பித்த புனிதர் அரேலியஸ் அகஸ்டின்



தன் கிறிஸ்தவ தாய் மோனிகா அவர்களின் அன்பான அரவணைப்பிலும், கண்டிப்பான கண்காணிப்பிலும் வட ஆப்பிரிக்கா தேசத்தில் வளர்ந்து வந்தவர்தான் புனிதர் அகஸ்டின். தன் இளம் வாலிப பருவத்தில் கி.பி.383-ம் வருஷத்தில் ரோம் நாட்டிற்கு சென்று கல்வி பயின்றார். அந்நாட்களில் பிரபல்யமாயிருந்த பிஷப் அம்ரோஸ் அவர்களை சந்தித்து, அவரிடம் தீவிரமாய் தேவனைப் பற்றிய அறிவை விசாரித்து, முடிவில் தன் ஆத்துமாவில் ‘ஆவிக்குரிய அமைதி’ கண்டடைந்தார். அதனிமித்தம், அவர் அறிவித்த மிகப் பெரிய சத்தியம் என்னவென்றால்: “கர்த்தாவே, நீர் எங்களை உமக்காவே படைத்தீர். உம்மை கண்டடையும் வரை எங்கள் இருதயத்தில் இளைப்பாறுதல் தங்கவில்லை” என்ற வாக்கியங்கள், அநேகருடைய ஆத்துமாவை விழிப்படையச் செய்தது.

அக்காலங்களில் ரோம சாம்ராஜ்ஜியம் சிதைய தொடங்கிய நாட்களில் “தேவனுடைய நகரம்” என்ற புத்தகத்தை எழுதினார். அந்த புத்தகம் கிறிஸ்தவர் மத்தியில் மிக உன்னதமான தியான புத்தகமாய் மாறியது. அந்த புத்தகத்தை கிறிஸ்தவ மக்களுக்காக அருளப்பட்ட “ஆவிக்குரிய சுய சரிதை” என்று கூறுவதே சரியாக இருக்கும். அந்த புத்தகத்தில் வழிந்தோடிய தியான நறுமணம் ஏராளம் உண்டு! அவைகளில் ஒரு சிலவற்றை தியானித்துப் பாருங்கள்:

1. கர்த்தாவே நான் உம்மை நேசிக்கிறேன்! சந்தேகத்தோடு அல்ல, முழு நிச்சயமாய் நேசிக்கிறேன். உமது வேதப்புத்தகத்தின் வார்த்தைகள் என் இதய துடிப்பாய் மாறி, உமது வேதங்கள் உம்மை நேசிக்கும் அளவிற்கடங்காத நேசத்திற்குள் நடத்தியது! நான் அண்டசராசரங்களை சுற்றி பார்த்தபோது ‘அவரை நேசி’ என்றே அனைத்து சிருஷ்டிப்புகளும் எனக்கு அறிவுறுத்தின!

2. கர்த்தாவே நான் உம்மிடத்தில் எதை நேசித்தேன்? சரீர அழகோ? சிருஷ்டிப்பின் வசீகரமோ? மலர்களின் நறுமணமோ? வாசனை வர்க்கத்தின் திரவியங்களோ? தெவிட்டாத தேன் சுவையோ?.... இவை யாதொன்றும் நான் நேசிக்காமல், கர்த்தாவே, உம்மை மாத்திரமே நேசிக்கிறேன்!

3. நான் பூமியைப் பார்த்து என் தேவனை நீ அறிவாயோ? எனக் கேட்டேன். இந்த பூமியோ “அவர் நானல்ல” என தலை வணங்கியது. நான் ஓடி ஓடிச் சென்று சமுத்திரத்தை கேட்டேன், வானங்களை கேட்டேன், சூரிய சந்திரங்களை கேட்டேன். கோடி கோடியாய் மின்னும் நட்சத்திரங்களை கேட்டேன். ஆகிய அனைத்தும், “எங்களில் ஒருவராகிலும் நீர் தேடும் தேவனல்ல!” என்றே பதில் கூறினது. நானோ, உணர்ச்சி பொங்க “என்னை சுற்றியுள்ள அழகிய மனம் கவரும் சிருஷ்டிப்புகளே, உங்கள் பதிலில் நான் திருப்தி அடையவில்லை! நீங்களோ “நான் அவர் அல்ல” என்று சொன்னீர்களே, அப்படியானால் அவரைப் பற்றி ஏதாவது சொல்லுங்களேன்?” என மன்றாடினேன். அப்போது அவை அனைத்தும் உரத்த சத்தமாய் எனக்கு கூறினது என்னவென்றால் “அவராலே, நாங்கள் சிருஷ்டிக்கப்பட்டோம்!” என கூறி, மீண்டும் மௌனமாகி தங்களின் சிருஷ்டிப்பின் அழகை இடைவிடாமல் வாரி வழங்கி கொண்டே இருந்தன!

– நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாலிபனே, தேவனை கிட்டிச்சேர ‘உன் விசுவாசமே’ தேவை!

தேவன் உங்களுக்கு வெகு தூரமானவர் என ஜனங்களை நம்பவைத்த பிசாசு ஓர் கொடூர பொல்லாங்கன்! தேவனை நீங்கள் கிட்டிச்சேர வேண்டிய தேவை எவ்வளவு அதிகம் இருக்கிறதோ, அந்த அளவிற்கு அதிகமாய் அவனது பொய்யின் வஞ்சகத்தை நம் மனதில் புகுத்திட தீவிரம் கொள்கிறான். நான் ஒருசமயம், சுகவீனமான என் மனைவியைவிட்டு சுமார் 7-மணி நேர பிரயாண இடைவெளியில் இருந்தபோது என் உள்ளம் மிகவும் சோர்ந்துபோனது! ஆனால் நான் ஊழியம் செய்த கிராமத்தில் டெலிபோன் இருப்பதை அறிந்து, அங்கு ஓடோடிச் சென்று என் மனைவியிடம் 2-நிமிடத்திற்குள் தொடர்புகொண்டு ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டோம்! ஆம், சோர்வுற்ற என் மனைவி பெலனடைந்து தன் பூரண மகிழ்ச்சியை என்னிடம் பகிர்ந்து கொண்டாள்.... நானும் என் மனஉளைச்சலிலிருந்து அந்த சில நிமிடங்களில் வெளியே வந்து விட்டேன்! இதில் என்ன இரகசியம்? எனக்கும் என் மனைவிக்கும் ஒரு டெலிபோன் அளவு தூரமே இடைவெளி இருந்தது என்பதுதான்!

*ஆனால் இன்றோ, தேவனுடைய ஜனங்கள் எண்ணற்ற துன்பங்களில் துவண்டு, ஏராளமான தோல்விகளில் உழன்று, மனச்சோர்வின் சேற்றில் சிக்கி, ஒன்றன்பின் ஒன்றாய் வந்த பிரச்சனைகளை முதுகு வளைய சுமந்து... தவிக்கிறார்களே ஏன்?*

ஏன்? தேவனோடு தொடர்பு கொண்டு அவரிடம் இவையனைத்தையும் தெரியப்படுத்தி சமாதானம் பெற்றிருக்கலாமே? சமாதானம் பெறும் வார்த்தை, இவர்கள் உதட்டிற்கும் இவர்கள் இருதயத்திற்கும் உள்ள இடைவெளி தூரமே உள்ளது என்பதை இவர்கள் அறியாது இருந்த மடமையே அதற்கு காரணமாகும்! இருதயத்தில் உள்ள தொடர்பு வயர் சரியாக இருக்கும் பட்சத்தில், தேவனுடைய செவிகள் இவர்களின் “ஜெப வார்த்தைகளை” கேட்பதற்கு மிகுந்த ஆர்வமும் ஆயத்தமும் உள்ளதாகவே இருக்கிறது.

ஒரே ஒரு நிபந்தனை! வானத்தையும் பூமியையும் இணைப்பதுபோல், உங்கள் உதட்டையும், தேவன் தங்கியிருக்கும் உங்கள் இருதயத்தையும் இணைப்பதற்கு தேவையான, சுமார் ஒரு அடி மாத்திரமே தூரம் உள்ள அந்த தொலைபேசி வயர் என்ன தெரியுமா? “உங்கள் விசுவாசமே” அந்த தொடர்பு வயர்! கர்த்தரையே சார்ந்து கொண்டும் விசுவாசமே, உங்களை இரட்சித்து, உங்கள் தேவைகளை கர்த்தர் பூர்த்தி செய்வார்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship@indianbk